

தமிழ்
:இலக்கணம்:
எழுவாய்
பயனிலை
செயப்படுபொருள்


வாக்கியத்தில்
கூறுகள் மூன்று
எழுவாய்
பயனிலை
செயப்படுபொருள்


தமிழ்
:இலக்கணம்:
எழுவாய்
பயனிலை
செயப்படுபொருள்
செயபபடுபொருள்
பயனிலை

# INSTRUCTIONS TO STUDENTS

- DRESS PROPERLY
- ALWAYS KEEP THE MICROPHONE AND CAMERA UNMUTED
- ARRANGE A COMPATIBLE INTERNET CONNECTIVITY
- KEEPP ALL THE ITEMS LIKE TEXTBOOK ,PEN READY
- ENTER THE CLASSROOM IN TIME
- PROMPTLY RETURN AFTER BREAKS
- USECHAT BOX FOR RESPONSES
- QUIT IMMEDIATELY AFTER THE SESSION
- PARENTS TO REMAIN PASSIVE OBSERVERS

# எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்

**எழுவாய்** - ஒரு செயல் நிகழ்வதற்குக் காரணமாய் இருப்பது எழுவாய்.
- பயனிலையின் முன் யார், எது, எவை, யாவை முதலிய வினாக்களை எழுப்பும்போது கிடைக்கும் விடையே வாக்கியத்தின் எழுவாய் ஆகும்.
- பெயர்ச்சொற்கள், தொகைகள் முதலியவை வாக்கியத்தில் எழுவாயாக அமையும்.
- எழுவாய் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் உணர்த்தப்படும்.

**பயனிலை** - எழுவாயின் செயலைக் காட்டும் சொல் பயனிலை ஆகும்.
- வினைமுற்றுகள், பெயர்ச்சொற்கள், வினைப்பெயர் ஆகியவை பயனிலையாக வரும்.
- எல்லா வாக்கியங்களிலும் பயனிலை இருக்கும்.

**செயப்படுபொருள்** - யாரை, எதை, எவற்றை முதலிய வினாக்களை எழுப்பும் போது கிடைக்கும் விடையே வாக்கியத்தின் செயப்படுபொருள் ஆகும்.
- எல்லா வாக்கியங்களிலும் செயப்படுபொருள் இருக்காது.

எ.கா: 1. அருண் வீட்டை அடைந்தார்.
(எழுவாய்) (செயப்படுபொருள்) (பயனிலை)


எழுவாய் என்பது என்ன?
ஒரு செயல் நிகழ்வதற்குக் காரணமாய் இருப்பது எழுவாய்.
எழுவாய் என்பது பெயர்ச்சொல்.
பெரும்பாலும் வாக்கியத்தின் முதலில் வரும்.

எழுவாய்:

எழுவாய் எப்போதும் பெயர்ச் சொல்லாகவே இருக்கும். ஒரு தொடரில் யார், எது, யாவர், எவை என்னும் வினாக்களுக்கு விடையாக வரும் சொல்லே எழுவாய்.

எடுத்துக்காட்டு: கீதா படம் வரைந்தாள்.

↓

எழுவாய்.



## எழுவாயைக் கண்டறிவது எப்படி?

**யார்** , **எது** , அல்லது **எவை** என்னும் கேள்விகளுக்கு விடை கொடுக்கும்.

எடுத்துக்காட்டு:

**அப்பா வாகனத்தைக் கழுவினார்.**

கேள்வி : **யார்** கழுவினார்?

விடை : **அப்பா** (எழுவாய்)

- ஒரு தொடரில் அமைய வேண்டிய தலையாய உருப்புகளாகக் கருதப்படுவன எழுவாய் பயனிலை ஆகிய இரண்டும் ஆகும்.

எழுவாய்
- பெயர்ச்சொல்

பயனிலை
- வினைச்சொல்

பயனிலை

எழுவாய் என்ன வினையைச் செய்தது என்பதை விளக்குவதே பயனிலை ஆகும்.

பயனிலை – பயன் நிலை – எழுவாய் எத்தகைய பயனை நிகழ்த்தியது என்பதே பயனிலை ஆகும்.

எ.கா :

குருவி பறந்தது

இதில் "பறந்தது" என்பது பயனிலை.



மாலினியும் சுவாதியும் பாடம் படித்தனர்.

(எழுவாய்) (எழுவாய்) (பயனிலை)



எடுத்துக்காட்டு:
1. அரசி வரைந்தாள்.
2. அம்மா உணவு பரிமாறினார்.
3. முயல்கள் வேகமாக குதித்தன.
4. மாணவர்கள் அறிவியல் பரிசோதனை செய்தனர்.
5. அப்பா மீன் கறி சமைத்தார்.

# செயப்படுபொருள் அறிக.



வாக்கியங்களில் மூன்று கூறுகள் உள்ளன.

எழுவாய்

செயப்படுபொருள்

பயனிலை

பயனிலையில் நின்று யாரை, எதை, எவற்றை முதலிய வினாக்களை எழுப்பும்போது கிடைக்கும் விடையே வாக்கியத்தின் செயப்படுபொருள் ஆகும்.


நன்றி
Thank You!